2nd November 1966]

திரு. கே. டி. கோசல்ராம்: சார், மதிய உணவு போடக்கூடிய எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இலவசமாகப் புத்தகங்கள் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இது சம்பந்தமாக ஸ்டாடிஸ்டிக்ஸ் எடுத்து, எவ்விதம் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன என்று அறிய முயற்சி எடுப்பார்களா? மதிய உணவு போடாத பள்ளிகளில் கொடுக்கிறார்கள் என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம். திரு. எம். பக்தவத்சலம்: அப்படிப்பட்ட விவரம் என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினரிடம் தகவல் இருந்து தெரிவித்தால் மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

கல்விக்குழு

***309 கேள்வி.—திரு. செ. மாதவன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசு நியமித்த கல்விக் குழுவின் (கோதாரி கமிசன்) சிபாரிசுகள் அண்மையில் இம்மாநில அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசாங்கம் எடுத்த முடிவுகள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The recommendations of the Education Commission have been received.

(*b*) They are being examined.

திரு. செ. மாதவன்: எற்கனவே, இந்த அரசாங்கத்திடம் கல்லூரிகளில் கால அளவை மாற்றவேண்டும் என்கிற கோரிக்கை இருந்தது. அந்தக் குறிப்பிலே கல்லூரிகளில் எத்தனை ஆண்டுகள் என்று சொல்லியிருக்கிறது என்று அறியலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எஜுகேஷன் கமிஷன் தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் நாம் அனுசரித்து வரும் முறைகளுக்கு முரணானவையாக இருக்கின்றன. இரண்டு நாட்கள் கல்வி நிபுணர்கள் ஒன்று கூடிக் கருத்தரங்கு நடந்தினார்கள். அந்தச் சமயம், இப்பொழுது அமலில் இருக்கும் கால அளவை மாற்றுவது சரியில்லை என்று என்னுடைய கருத்தையும் நான் அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன். அதையெல்லாம் கருத்தரங்கு ஆராய்ந்து, அவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பார்கள். அதற்கு மேல் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

திரு. செ. மாதவன்: ஆசிரியர்களுடைய சம்பளம் மாற்றி அமைக்கப்படவேண்டும், குறைந்தபட்ச சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்று மத்திய சர்க்கார் வலியுறுத்தி இருக்கிறது; இந்தக் குறிப்பிலேயும் காணப்படுகிறது. இந்த ஆண்டு சப்ளிமெண்டரி பட்ஜட்டிலேயே ஆசிரியர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றியும் என்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறேன். கனம் அங்கத்தினருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். மற்ற மாநிலங்களில் உள்ள ஆசிரியர்களைவிட நம் மாநிலத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு அதிகச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இப்பொழுது இருக்கும் நிலையில் அதிகரிக்க முடியாது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. செ. மாதவன் : 'அந்தக் கருத்தரங்கில் இந்த அறிக்கை பரிசீலனை செய்யப்படுகிறது' என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு பரிசீலிக்கப்பட்ட பிறகாவது, அதனுடைய அறிக்கையை அரசாங்கம் பரிசீலிக்க இருக்கிறதா? அல்லது, இந்த அறிக்கை மீதே அரசாங்கம் முடிவுக்கு வர இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கருத்தரங்கில் தெரிவிக்கப்படும் கருத்துக்களை இந்த அரசாங்கம் கவனிக்கும். அவற்றை மத்திய அரசாங்கத்திற்கும் அனுப்பும்.

Women candidates for S.S.L.C.

* 310 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have envisaged a scheme for imparting free coaching to selected women candidates appearing for the October 1968 S.S.L.C. examination; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

Regional Transport Officers.

* 311. *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to appoint Additional Regional Transport Officers in the heavy districts of Coimbatore, Madurai and Chingleput in 1966–67?

THE HON. SRI R. VENKATARAMAN : A proposal for the appointment of an Additional Regional Transport Officer in Coimbatore district only is under consideration.

பெரிய நகரங்களிலுள்ள டவுன்பஸ் சர்வீஸ்

* 312 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அண்மையில் நீலகிரியில் கூடிய அகில இந்திய அரசாங்கப் போக்குவரத்துத்துறை நிலைக்குழு செய்துள்ள சிபாரிசையொட்டி, வேலூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், சேலம் முதலிய பெரிய நகரங்களில் உள்ள டவுன்பஸ் சர்வீசை அரசாங்கம் எடுத்து நடத்த உத்தேசமுண்டா?